# 3

# மறுமை நாள்




இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களுள் மறுமை நாளும் ஒன்றாகும். அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் மறுமை நாள் மீதான நம்பிக்கை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இறை நம்பிக்கையானது, வாழ்க்கை எவ்வாறு ஆரம்பமானது என்பது பற்றிய திட்டவட்டமான அறிவை மனிதனுக்கு வழங்குகிறது. மறுமை நம்பிக்கையானது வாழ்க்கையின் முடிவு பற்றிய தீர்க்கமான அறிவை வழங்குகிறது.

வாழ்வின் ஆரம்பம் - முடிவு பற்றிய திட்டவட்டமான உண்மையைத் தெரிந்துகொள்வதன் மூலமே வாழ்க்கைக்கான நோக்கத்தை வகுத்துக்கொள்ள முடியும்.

மறுமை நம்பிக்கை இல்லாத ஒருவன் உலகில் மனம்போன போக்கில் வாழ முற்படுவான். மார்க்கப் போதனைகளையும் ஒழுக்கப் பண்புகளையும் புறக்கணிப்பான். அவனது வாழ்க்கை மிருக வாழ்க்கை போன்று அமைந்துவிடும். இதனால் அவன் தனது மனிதத்துவத்தை இழந்து விடுவான்.

இந்நிலையில் பொய், சுயநலம், துரோகமிழைத்தல், வாக்கு மீறுதல், குறுக்கு வழிகள் மூலம் இலாபமீட்டல், தற்கொலை, கொலை முதலான தீய செயல்கள் மக்கள் மத்தியில் அதிகரித்துவிடும்.

மேலும் சத்தியம், நீதி, நியாயம், தர்மம், வாக்குறுதி காத்தல், பொது நலன் பேணல் போன்ற உயர் பண்புகள் மனித குலத்திற்கு மத்தியில் உதாசீனப்படுத்தப்படும்.

மறுமை நம்பிக்கை இல்லாதபோது அல்லாஹ் மனிதனுக்கு எனப் பிரத்தியேகமாக வழங்கியுள்ள தனித்துவங்களும் அர்த்தமற்றதாகிவிடும்.

அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இறை நம்பிக்கையோடு இணைத்து மறுமை நம்பிக்கை வலியுறுத்தப்பட்டிருப்பது அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. அல்குர்ஆனில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பெயர்களில் மறுமை சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது. யவ்முல் பஃஸ், யவ்முல் ஹிஸாப், யவ்முல் கியாமா, யவ்முல் ஆகிரா, யவ்முத் தீன், யவ்முத் தஆபுன் போன்றன அவற்றில் சிலவாகும்.

மனிதன் இவ்வுலகில் செய்யும் செயல்களுக்கான கூலி மறுமையில் வழங்கப்படும். ஈமான் கொண்டு தூய உள்ளத்தோடு நற்செயல்கள் செய்கின்றவர்கள் மறுமையில் வெற்றி பெற்று சுவனத்தை வெகுமகுதியாகப் பெறுவர். நிராகரிப்பிலும் பாவச் செயல் களிலும் மூழ்கியவர்கள் நரகில் நுழைவர். மறுமையில் வெற்றியடைந்து சுவனத்தை அடைவதே முஸ்லிமின் நோக்கமாகவும், அதற்காகச் செயற்படுவதே அவனது பணியாகவும் அமைதல் வேண்டும்.

மறுமை நம்பிக்கையுடன் தொடர்பான நிகழ்வுகள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

## பஃஸ் (மீண்டும் எழுப்பப்படுதல்)

அல்லாஹ்வின் கட்டளைப்படி இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதன்முறையாக ஸூர் ஊத, மறுமை நாளின் நிகழ்வுகள் ஆரம்பமாகும். அப்பொழுது பூமி மற்றும் கோள்களின் ஒழுங்கமைப்பு சிதைந்துவிடும். மனிதர்கள் உட்பட ஜீவராசிகள் அனைத்தும் மரணித்துவிடும்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இரண்டாவது ஸூர் ஊதப்படும். அப்பொழுது மரணித்த அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவர். இதனையே **பஃஸ்** என்பர்.

## மஹ்ஷர்

**மஹ்ஷர்** எனப்படுவது ஒரு திறந்தவெளியாகும். இரண்டாம் ஸூருடன் எழுப்பப்படும் அனைவரும் இங்கேயே ஒன்றுகூடுவர். இங்கு தலைக்கு மேலால் மிக அண்மித்திருக்கும் சூரிய வெப்பத்தின் அகோரம் காரணமாக மக்கள் மிகவும் வேதனைப்படுவர். வியர்வை வெள்ளமாக நிரம்பியிருக்கும். அர்ஷின் நிழலைத் தவிர அங்கு எந்த நிழலும் இருக்காது. மக்கள் வேதனை தாங்காது தங்களுக்காக மன்றாடும்படி ஒவ்வொரு நபியிடமும் சென்று முறையிடுவர். ஒவ்வொருவரும் அடுத்த நபியிடம் சென்று முறையிடுமாறு ஆலோசனை கூறுவர். இறுதியாக மக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று வேதனையின் அகோரத்தைத் தாங்க முடியாது மறுமை விசாரணையைத் துரிதப்படுத்துமாறு அல்லாஹ்விடம் மன்றாடும்படி வேண்டுவர். அவர்களும் அல்லாஹ்விடம் மன்றாடி அணுவளவேனும் உள்ளத்தில் ஈமான் உள்ளவர்களுக்கு ஷபாஅத்தைப் பெற்றுக்கொடுப்பார்கள். இதனையே **'ஷபாஅத்துல் குப்ரா' (பெரிய மன்றாட்டம்)** என அழைப்பர்.

## ஹிஸாப்

இது விசாரணையைக் குறிக்கிறது. ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரிக்குமாறு அல்லாஹ் கட்டளை பிறப்பிப்பான். தான் செய்த குற்றங்களை மறுத்து எவருக்கும் அங்கு தப்பித்துக்கொள்ள முடியாது.

மனிதன் வாழ்ந்த பூமியும் அவனது உடல் உறுப்புக்களும் அவன் செய்த செயல்கள் குறித்து சாட்சி கூறும். மேலும் உலகில் அவர்கள் செய்த செயல்கள் பதிவு செய்யப்பட்ட பட்டோலைகள் (பதிவேடு) அவரவர் கைகளில் வழங்கப்படும். நல்லடியார்களின் பட்டோலைகள் அவர்களது வலக் கரங்களில் கொடுக்கப்படும். அவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு மற்றவர்களிடம் காட்டுவதற்கு மகிழ்ச்சியோடு ஓடுவார்கள்.

பாவிகளின் பட்டோலைகளோ அவர்களது இடக்கரங்களில் கொடுக்கப்படும். அவற்றைப் பெற்றுக்கொண்ட அவர்கள் கைசேதப்பட்டு அழுவார்கள்.

தொடர்ந்து **மீஸான்** எனும் தராசில் ஒவ்வொருவரதும் செயல்கள் நிறுக்கப்படும். அந்தத் தராசு அணுவளவிலான செயல்களையும் துல்லியமாகக் காட்டக்கூடியதாகும்.

## ஹவ்லுல் கவ்ஸர்

விசாரணைகளின் முடிவுகளை அடுத்து ஒவ்வொரு நபிமாரும் தமது உம்மத்தினருடன் அவரவர்களுக்குரிய தடாகத்தை நோக்கி வந்து நீர் அருந்துவர். இவற்றுள் மிகவும் பாக்கியம் நிறைந்த தடாகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்படும் **ஹவ்லுல் கவ்ஸர்** எனும் தடாகமாகும். அதன் நீர் பாலைவிட வெண்மையானது; தேனைவிட இனிமையானது; கஸ்தூரியைவிட சுகந்தமானது; அதிலிருந்து அருந்தியவர்களுக்கு என்றுமே தாகம் வராது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த நல்லடியார்கள் அனைவருக்கும் இதிலிருந்து நீர் அருந்தும் பாக்கியம் கிடைக்கும்.

## ஸிராத்

அடுத்த கட்டமாக நரகத்தின் மேலால் உள்ள **ஸிராத்** எனும் பாலத்தைக் கடக்கும் நிகழ்வு இடம்பெறும். மக்கள் தாம் செய்த நன்மைகளுக்கு ஏற்ப வித்தியாசமான வேகத்தில் அதனைக் கடந்து செல்ல முயல்வர். இறை நிராகரிப்பாளர்களும் பாவிகளும் அதைக் கடக்க முடியாது நரகில் விழுவர்.

**எனவே மறுமை பற்றிய நம்பிக்கையை எமது உள்ளத்தில் ஆழமாகப் பதித்து எமது வாழ்வைச் சீரமைத்துக்கொள்வோம். சுவனத்தை வெகுமதியாகப் பெறுவோம்.**

## பயிற்சி

*சுருக்கமான விடை தருக.*

1. *மஹ்ஷர் எனப்படுவது யாது?*
2. *ஸூர் ஊதும் மலக்கின் பெயர் யாது?*
3. *உலக வாழ்வின் நோக்கத்தை வகுத்துக்கொள்ள உதவும் காரணிகள் எவை?*
4. *முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மன்றாட்டம் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?*

## செயற்பாடு

*(அ) அல்குர்ஆன் மறுமையைச் சுட்டப் பயன்படுத்தும் சொற்றொடர்கள் ஐந்தைக் குறிப்பிடுக.*

*(ஆ) மறுமை நிகழ்வின் கட்டங்களை வகைப்படுத்தி அதனுடன் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ்களைத் தேடி எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*